
Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

MONDAY, JANUARY 06 2025

திங்கட்கிழமை 06 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 130 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# வவுனியாவில் 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

க.அகரன்

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2024ஆம் ஆண்டு 41 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை, சிறுபோகம் மற்றும் பெரும் போகம் போன்ற நெற் பயிர் செய்கை காலங்களில் எலிக்காய்ச்சல் தொற்று குறிப்பிட்டளவு பதிவாகியிருக்கிறது.

எனினும், 2024ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 41 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாதிக்கப்பட்டனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்கு சென்றுள்ளனர் என்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

# தூய்மையான இலங்கையில் பொலிஸார் அதிரடி அறிவிப்பு



"தூய்மையான இலங்கை" திட்டத்திற்கு அமைவாக, விபத்துகளைக் குறைத்தல் மற்றும் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் இலங்கை பொலிஸ் திணைக்களம் இரண்டு போக்குவரத்து முயற்சிகளை ஆரம்பித்துள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மாற்றப்பட்ட ஹோரன் ஒலிகள், பல்வேறு வண்ணங்களின் ஒளிரும் விளக்குகள், சட்ட விரோதமான மாற்றங்கள், உரத்த ஹார்ன்கள், சத்தமில்லாத சைலன்சர்கள் மற்றும் விபத்து அபாயத்தை அதிகரிக்கும் கூடுதல் பாகங்கள் கொண்ட வாகனங்களைக் குறிவைத்து முதலாவது நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பொதுப் போக்குவரத்து பேருந்து ஓட்டுநர்களால் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிந்து அதற்கேற்ப சட்டத்தை அமுல்படுத்துவதற்கு சிவில் உடையில் அதிகாரிகளை நியமிப்பது இரண்டாவது முயற்சிக்குள் அடங்கும் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சாரதிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் ஜனவரி 4 முதல் 19 வரை ஒரு முன்னோடித் திட்டமாக நடத்தப்படும் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ரூ.5,000 போலி நாணயத்தாள்களை தயாரிக்கும் நிலையம் சிக்கியது




அம்பாறை - தமன, வனகமுவ பிரதேசத்தில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் என்ற போர்வையில் வீடொன்றில் இயங்கி வந்த 5,000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைச் சுற்றிவளைத்து மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# 'ஐஸ்' விற்ற பட்டதாரி யுவதி கைது

டுபாயில் தலைமறைவாகி இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரின் போதைப்பொருட்களை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த 20 வயதுடைய பட்டதாரி யுவதியொருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக ஹன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## நுண்நிதிக் கடன் வலையில் சிக்கி

# 200 பெண்கள் மரணம்

இலங்கையில் கடந்த சில வருடங்களில் நுண்நிதிக் கடன் வலையில் சிக்கிய சுமார் 200 பெண்கள் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளதாகத் தேசிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார். இந்நாட்டில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக் கடன் பெறுகின்றனர், அதில் 24 இலட்சம் பேர் பெண்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையிலுள்ள நுண் நிதி நிறுவனங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிக வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதாகவும், கடனை செலுத்த முடியாத சில பெண்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சில பிரதிநிதிகளினால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதாகவும் ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையினால் குடும்பங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்ந்து பிள்ளைகள் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளதாகவும், சில பெண்கள் வேலை செய்ய வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேறத் தூண்டப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

# "காதலர்கள் காதலிக்கட்டும்"



"காதலர்கள் காதலிக்கட்டும்! மற்றவர்கள் ஏன் அதைப் பற்றி கவலைப்பட வேண்டும்? சமூக ஊடகங்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த ஒரு நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தனது சக பாராளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கோட்டஹச்சியின் விமர்சனங்கள் குறித்துப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

## வைத்தியரை போல வேடமணிந்து

# நகைகளை நாசுக்காக அபகரித்த செவிலியர்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் தனது தாயாரை பார்க்க வந்த பெண்ணிடம் இருந்து தங்கப் பொருட்களை, வைத்தியர் என கூறி மோசடி செய்து அபகரித்த ஆண் செவிலியர் ஒருவரை மருதானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி அனுர சீனாவுக்கு பயணம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

இந்த பயணத்தின் போது, அவர் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் லீ கியாங் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.




# அரிசி மூடைகளுடன் நாய்கள்; சாரதி கைது

இரண்டு நாய்களுடன் அரிசி மூடைகளைக் கொண்டு சென்ற போது, பலாங்கொடை பொது பாதுகாப்பு பரிசோதகர்கள் உதவியாளருடன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், லொறியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை நகரில் உள்ள கடைகளுக்கு விநியோகம் செய்வதற்காகவே இந்த அரிசி மூடைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

பலாங்கொடை நகரின் பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கடையொன்றிற்கு அருகில் லொறி நிறுத்தி, அரிசி மூட்டைகளை இறக்க முற்பட்ட போது, லொறியில் அரிசி மூட்டைகளுக்கு இடையில் இரண்டு நாய்கள் இருப்பதைக் கண்ட நகரைச் சேர்ந்த நபர் ஒருவர், அதனைத் தனது கைத்தொலைபேசியில் வீடியோ எடுத்து பொது பாதுகாப்பு பரிசோதகர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# உல்லாசம் அனுபவித்த எட்டு பேர் கைது



செ.தி.பெருமாள்

உல்லாசமாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் எட்டு பேரை நல்லத்தண்ணி வனத் துறை அதிகாரிகள் மற்றும் அதிரடி படையினர், ஞாயிற்றுக்கிழமை (05) கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# "திரிபோஷாவை உற்பத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது"



மக்களின் போசாக்கு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வசதிகளைப் புனரமைத்து திரிபோஷாவை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# தவறுதலாக கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு



வா.கிருஷ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(05) காலை குளிக்கும்போது, தவறுதலாக கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "அக்கறை, ஆர்வம் இருந்தால் எதையும் செய்து காட்ட முடியும்"

எஸ்.தில்லைநாதன்

ஒவ்வொரு பாடசாலைகளினதும் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்தே எதிர்காலத்தில் அந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்களின் இடமாற்றங்கள், பாடசாலை உட்கட்டமைப்பு விருத்திக்கான உதவிகள் என்பனவற்றை வழங்கலாமா? என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# இருவரை நீதியரசர்களாக நியமிக்க அங்கீகாரம்

மேல் நீதிமன்ற நீதிபதிகளான கே.எம்.சரத் திசாநாயக்க மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## புலமைப்பரிசில் பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீடு ஜனவரி 8 ஆரம்பம்



கடந்த வருடம் (2024ஆம் ஆண்டு) இடம்பெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தூய்மையான இலங்கையில்பொ லிஸார் அதிரடி அறிவிப்பு

முதல் செயல்பாட்டின் போது, அதிகாரிகள் முதன்மையாக சாரதிகளுக்குக் கற்பித்தல், எச்சரிக்கைகளை வழங்குதல் மற்றும் அவர்களின் வாகனங்களில் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களை அகற்ற அறிவுறுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவார்கள்.

வாகன மாற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தவும், இரகசிய அதிகாரிகள் மூலம் பொதுப் போக்குவரத்து பேருந்துகளை மேலும் கண்காணிக்கவும் திட்டமிட்டுள்ள நிலையில், இந்த முயற்சிகள் சோதனைக் கட்டத்திற்கு அப்பால் தொடரும் என எதிர்பார்ப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரூ.5,000 போலி நாணயத்தாள்களை தயாரிக்கும் நிலையம் சிக்கியது

அத்துடன், போலி நாணயத்தாள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மடிக்கணினி உள்ளிட்ட பல உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாகத் தமன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் 29-20 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த இடத்தில் ஏ-4 அளவு தாள்கள், மூன்று அச்சுடிக்கப்பட்ட பிறகும் வெட்டி அகற்றப்படாத 10 போலியான 5,000 ரூபாய் பெறுமதியான நோட்டுகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

## 'ஐஸ்' விற்ற...

இந்த யுவதி, இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களில் இரண்டு பட்டங்களைப் பெற்றுள்ளதாகவும், வெளிநாடு செல்வதற்குத் தேவையான பணத்தைத் திரட்டுவதற்காகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹன்வெல்ல நகரில் யுவதியொருவர் ஐஸ் போதைப்பொருள் விநியோகம் செய்வதாக ஹன்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எல். இராஜசிங்கத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அதிகாரிகள் குழுவொன்று சென்று சந்தேக நபரான யுவதியைக் கைது செய்துள்ளது.

ஹங்வெல்ல பிரதேசத்தில் உள்ள துபாய் குற்றவாளியின் போதைப்பொருள் வலையமைப்பின் பொறுப்பாளருடன் அவரது உறவினருக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதால், சந்தேக நபர் அந்த உறவின் அடிப்படையில் ஐஸ் போதைப்பொருளைப் பெற்று விற்பனை செய்துள்ளார் என கூறியுள்ள ஹங்வெல்ல பொலிஸார், இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

## நுண்நிதிக் கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் மரணம்

அத்துடன், சிறு நிதி கடன் பிரச்சினையால் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் உள்ளனர். அவர்களில் பலர் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் இல்லாமல், பதிவு செய்யப்பட்ட வங்கிகளில் கடன் பெற முடியாமல் நுண்கடன் நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனங்கள் வாரத்திற்கு 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை அதிக வட்டி வீதங்களுடன் வசூலிக்கின்றன, இதனால் பெண்கள் கடனில் தள்ளப்படுகிறார்கள்.

நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வந்துள்ள போதிலும், அது இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## "காதலர்கள் காதலிக்கட்டும்"

தனது மகள் கனடாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் படிக்கிறார் என்று சமூக ஊடகங்களில் ஒரு கதை கூட புனையப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

"அப்போது அரச ஊடகம் கூட அதனைச் செய்தியாக வெளியிட்டது. நானும் எனது மகளும் இந்த செய்தியைப் பார்த்துக்கொண்டிருந்தோம். எனக்குத் தெரியாமல் கனடாவில் எனக்கு ஒரு மகள் இருக்கிறாரா என்று விசாரிக்க வேண்டும் என்று நினைத்தேன். கோட்டஹறச்சிக்கு பிரச்சினை என்றால், மற்றவர்களை ஏன் வம்பு செய்கிறார்கள். அது அவளுடைய குடும்பத்தின் விடயமா என்று கேட்டுள்ளார்.

## நகைகளை...

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் செவிலியராகப் பணிபுரியும் பொலன்னறுவையைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்க நகைகளை பறிகொடுத்த பெண்ணின் தாயார், கடந்த ஒரு மாத காலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் குறித்த பெண்ணும் அவரது மூத்த சகோதரியும் நோயாளியான தன்னுடைய தாயை பார்க்கச் சென்றுள்ளனர். இதன்போது, நோயாளர்களைப் பார்வையிடும் வைத்திய போல வந்த, செவிலியரான சந்தேக நபர், முறைப்பாட்டாளரின் தாயின் பதிவுகளைச் சரிபார்த்து, அவரின் உடல்நிலைக்கு ஏற்ப இரத்தம் வழங்க வேண்டுமென கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர் இந்த இரண்டு பெண்களில் ஒருவரிடமிருந்து இரத்தம் எடுக்க விரும்புவதாக கூறி அவர்களை ஒரு வார்டுக்கு அழைத்துச் சென்று ஸ்கேன் செய்ய அனைத்து தங்கப் பொருட்களையும் கழற்ற சொன்னதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பின்னர், தனது தங்கப் பொருட்களைத் தனது சகோதரிக்குக் கொடுக்க விரும்புவதாக அந்தப் பெண் கூறியபோது, சந்தேக நபர் தனது சகோதரி வார்டுக்கு வெளியே இருப்பதாகக் கூறி குரல் பதிவைப் போலியாக வெளியிட்டுள்ளார்.

குறித்த பெண் தனது தங்கப் பொருட்களை அந்த நபரிடம் ஒப்படைத்துள்ள நிலையில், சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையில் இருந்த வைத்தியசாலை பாதுகாப்பு அதிகாரிகளிடம் கூறியதையடுத்து, சந்தேக நபர் குறித்த விபரங்கள் தெரியவந்துள்ளதுடன், மருதானை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தப்படவுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், மத்திய கொழும்பு பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் கலகமகேவின் பணிப்புரையின் பிரகாரம் மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் குமார அபலதொடுவ உள்ளிட்ட அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் சந்தேக நபர், கடந்த காலங்களிலும் வைத்தியர் போன்று நடித்து இவ்வாறான மோசடிகளைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தவறுதலாக கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

தும்பங்கேணி கிராமத்தை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய தங்கராசா பரமானந்தம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்நிலையில் வீழ்ந்து சனிக்கிழமை (04) உயிரிழந்த குழந்தையின் மரண வீட்டுக்கு சென்றுவிட்டு வந்து குளித்துக்கொண்டிருந்தபோது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக பிரதேசவாசிகளின் உதவியுடன் அவர் பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரிசி மூடைகளுடன் நாய்கள்; சாரதி கைது

அதன்படி, லொறியை கைப்பற்றிய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

இந்த லொறியில் இருபத்தி ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிக விலைக்கு விற்கப்படும் அரிசி கையிருப்பு இருந்ததாகவும், இந்த லொறி திஸ்ஸமஹாராமவில் உள்ள அரிசி ஆலைக்குச் சொந்தமானது எனவும் விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உல்லாசம் அனுபவித்த எட்டு பேர் கைது

இச்சம்பவம், காட்மோர் பகுதியில் உள்ள வனப் பகுதியில் இருந்து கவரவில பகுதிக்குச் செல்லும் சமவெளி வன பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவந்தது, 25க்கும் 30 க்கும் வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்கள் 25 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்ட ஆறு ஆண்கள், வனப்பகுதியில் உல்லாசமாக இருப்பதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல்களைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நல்லத்தண்ணி வனத் துறை அதிகாரிகள் மற்றும் அதிரடி படையினர் சந்தேகத்தின் பேரில் சாலாவ பகுதியில் உள்ள எட்டு பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எட்டுப் பேரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் விடுக்கப்பட்ட அழைப்பு இனங்கள், நாட்டின் பல பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள், அங்கு கூடாரம் அமைத்து தங்கியிருந்ததாக அறிய முடிகின்றது.

## இருவரை நீதியரசர்களாக நியமிக்க அங்கீகாரம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் இவ்விருவரின் பெயர்களும் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான திலாநாயக்க மற்றும் ஹெட்டியாராச்சி ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக அடுத்த வாரம் சத்தியப் பிரமாணம் செய்ய உள்ளனர்.

## "திரிபோஷாவை உற்பத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது"

கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷா உற்பத்தி நிலையத்துக்கு சனிக்கிழமை (04) கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டு, அங்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கந்தானையில் அமைந்துள்ள திரிபோஷ நிறுவனத்தின் நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஆராய்ந்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் நானே உண்மைகளைக் கண்டறிந்தேன். முன்னைய அரசாங்கங்கள் தேசிய பெறுமதி மிக்க திரிசபோஷ உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்து அதன் பலனை மக்களுக்கு வழங்கவில்லை. ஆனால், தமது அரசாங்கம் தேவையான செயற்பாட்டு நிறுவனமாக மாற்றும் நோக்கத்துடன் இணங்கி செயற்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திரிபோஷ உற்பத்தி நிறுவனத்தைக் கலைக்க கடந்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது. எனினும், திரிபோஷவை ஏற்படுத்தத் தொழிற்சாலை நிர்வாகம் மற்றும் ஊழியர்களுடன், ஒத்துழைப்பு மற்றும் எதிர்கால வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து விவாதித்து வருகிறது. எதிர்காலத்தில் திரிபோஷ உற்பத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது, சோளம் மற்றும் சோயாபீன் தேவைப்படும் அவற்றை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களையும் விவசாயிகளையும் ஊக்குவித்து ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கான தொடர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

சுகாதார விநியோக வலையமைப்பு சீர்குலைந்து உள்ளதால், மத்திய சுகாதார அமைச்சு திரிபோஷ சுகாதார பொருட்களை விற்பனை செய்யும் முறையை உருவாக்க வேண்டும். அபிவிருத்தியடைந்த நிறுவனத்தில் தொடர்ந்தும் வாழ அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றும் எனவும் கூறியுள்ளார்.

## "அக்கறை, ஆர்வம் இருந்தால் எதையும் செய்து காட்ட முடியும்"

கிளிநொச்சி - புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட 29.75 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் அமைக்கப்பட்ட கட்டடம், வடக்கு மாகாண ஆளுநரால் வெள்ளிக்கிழமை (03) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு ஒன்றுகூடல் மண்டபம் அவசியமாக இருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், கிராமப்புற பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதே எங்களின் பிரதான இலக்காக இருக்கின்றது என்று குறிப்பிட்டதுடன், அதன் ஊடாக கிராமப்புற மாணவர்களும் தமது பிரதேசத்தில் சிறப்பான கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார். அத்துடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியமைக்காக பாடசாலை சமூகத்தினரை ஆளுநர் பாராட்டியுள்ளார்.

மாணவர்கள் கல்வியில் சிறப்பான நிலையை அடைவது மாத்திரமல்ல, ஏனையோருக்கு உதவி செய்யும் குணத்தையும் வளர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார். மேலும் எங்களால் செய்ய முடியாது என்ற ஒன்றில்லை எனக் குறிப்பிட்ட ஆளுநர், அக்கறையும் ஆர்வமும் இருந்தால் எதையும் செய்து காட்ட முடியும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும் எனவும் கூறியுள்ளார்.



## விடைத்தாள் மதிப்பீடு ஜனவரி 8 ஆரம்பம்



இந்தத் தேர்வின் வினாத்தாள்கள் வெளியானதாகக் கூறப்படும் விவகாரத்தில் எழுந்த நெருக்கடியால் விடைத்தாள் மதிப்பீட்டைப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் ஒத்திவைத்திருந்தார்.

மூன்று சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கு பொதுவான மதிப்பெண்கள் வழங்குவதற்கான தேர்வு ஆணையரின் முடிவை எதிர்த்து பெற்றோர்கள் குழு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது மற்றும் நீதிமன்றத்தின் உத்தரவின்படி, சுட்டிக்காட்டப்பட்ட மூன்று பரிந்துரைகளின்படி பிரச்சினையைத் தீர்த்து இரண்டாவது ஆலோசனையைச் செயல்படுத்தியது. நீதிமன்றத்தால், முன்பு விடப்பட்டதாகக் கூறப்பட்ட மூன்று கேள்விகளும் பரீட்சார்த்திகளுக்கு பொது மதிப்பெண்கள் வழங்கப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

அதன்படி, தேர்வெழுதிய அனைத்து பரீட்சார்த்திகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியைத் தொடங்க பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

# “மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்க வேண்டும்”

■ ஏ.எச்.ஹஸ்பர்

துறைமுக அதிகார சபையின் காணியை மக்கள் பிடிக்கவில்லை, மக்களின் காணிகளையே இலங்கை துறைமுக அதிகார சபை கையகப்படுத்தியுள்ளது. எனவே, மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்கவேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை(03) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக அதிகார சபையினால் கையகப்படுத்தியுள்ள 5,226 ஏக்கர் நிலப் பகுதியில் 1,887 ஏக்கர் நிலப் பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, இந்தப் பகுதியை உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும். அதேபோன்று, வெல்வெறி பகுதியில் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தையும் உடனடியாக விடுவித்து உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டும்.

திருகோணமலை நகரத்தில் அமைந்துள்ள மக்ஹய்சர் விளையாட்டு அரங்கம் பாரம்பரியமாக திருக்கோணமலையில் பல சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கித் தந்தது எனவே, இந்த விளையாட்டு அரங்கை மீண்டும் சரி செய்து உருவாக்குவதன் மூலம் பல இளம் விளையாட்டு வீரர்களது ஏக்கத்தைத் தீர்ப்பதோடு அல்லாமல் சர்வதேச போட்டிகளை நடத்தி நாட்டிற்கு வருமானத்தையும் வெளிநாட்டு நாணய மாற்று வருவாயையும் பெருக்க இயலும்.

அத்துடன், திருகோணமலை தள மருத்துவமனையில் போதிய வசதியின்மையால் மகப்பேறு காலத்தில் பெண்கள் பல சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே சிறப்பான நடுவம் ஒன்று அமைக்க வேண்டுமென்றும், மருத்துவமனைக்குச் செல்லும் வீதியினை செப்பனிட வேண்டும்.

மேலும், திருகோணமலை நகர சபைக்குட்பட்ட பகுதியில் 03 மதகுகளும், திருகோணமலை உப்புவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் 12 வீதிகளும், 07 மதகுகளும் மறு சீரமைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நீரோடையில் விழுந்து, குழந்தை பலி



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

நீர் நிலைக்குள் வீழ்ந்து ஒன்றரை வயதான முருகேசு விகான் என்ற குழந்தை உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று சனிக்கிழமை(04) மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று இளைஞர் விவசாய திட்டத்தில் உள்ள நீரோடையில் விழுந்தே இந்த உயிரிழப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நீர்நிலைக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து குழந்தை தத்தி நடந்துவந்து விளையாடிக்கொண்டிருந்த போது, நீரோடைக்குள் வீழ்ந்துள்ளதுடன், குழந்தையை பழுகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோரின் கவனயீனம் காரணமாக உயிரிழந்த குழந்தையின் சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆலயத்தில் தீ பரவல்; பொலிஸார் விசாரணை



ஹட்டன், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் இரண்டாவது மாடியில் உள்ள விழா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) அதிகாலை 2 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ பரவல் காரணமாக மண்டபத்தில் இருந்த பிளாஸ்டிக் கதிரைகள் உள்ளிட்ட பல உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

மேலும், தீ பரவாமல் தடுக்க ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் தீயணைப்பு பிரிவு, ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து செயல்பட்டுள்ளனர்.

தீயினால் ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்பட வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், விழா மண்டபத்திற்கான மின்சாரத்தைத் தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தீ பரவலால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ‘கிளீன் ஸ்ரீலங்கா’ ஆரம்பம்





■ அ.அச்சுதன்

‘கிளீன் ஸ்ரீலங்கா’ எனும் தொனிப்பொருளில் திருகோணமலை நகரை தூய்மைப்படுத்தும் செயற்திட்டம் திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் தே.ஜெயவிஷ்னு தலைமையில் 2025 முதலாம் திகதி தொடக்கம் நகராட்சி மன்றம் தனது சேவையை விஸ்தரிக்கும் முகமாக விசேட பணிக்குழு (Revenu, Disaster and Development Task force) ஊடாக செய்து வருகிறது.

அதன் ஒரு கட்டமாக வெள்ளிக்கிழமை (03) அன்று முதல் ஊழியர்கள் பேருந்து தரிப்பு நிலையங்களை சுத்திகரித்து இருக்கைகள் மற்றும் கைப்பிடி கம்பங்களை வர்ணம் பூசி புதுப்பொலிவு படுத்தி வருகின்றனர்.

இந்த வேலைகளை ஊழியர்கள் இரவு பகல் பார்க்காமல் செய்து வருவதுடன் வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கின்ற வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுமிக்கு ஆபாச காணொளியை அனுப்பிய சிப்பாய் கைது

பதிமூன்று வயதுடைய பாடசாலை மாணவியை அச்சுறுத்தி தனது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசமான குறுஞ்செய்திகள் மற்றும் காணொளிகளை அனுப்பிய இராணுவ சிப்பாய் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (5) கைது செய்யப்பட்டதாக சிறிபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம்- தந்திரிமலை இராணுவ முகாமிற்குட்பட்ட பதவி பராக்கிரமபுர பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிறுத்தப்படவுள்ளார். சிறிபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கூட்டுப் பொறுப்பை மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்

வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் உருவாக்குவதற்குத் தேவையான கூட்டு அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்புணர்வின் செயல்முறை 'சுத்தமான இலங்கை' யாகும். இந்த தேசிய வேலைத் திட்டத்திற்காக வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்படுவோம்.

முழு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குவது குடிமகனுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே நேரடி இணைப்பை உருவாக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்களை வழங்க வந்திருந்த கணினி வல்லுநர்கள் தானாக முன்வந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்திருந்தனர். அதற்கான ஒரு படியாக, போக்குவரத்து புகார்களை உடனுக்குடன் தெரிவிக்கும் இ-ட்ராஃபிக் மொபைல் போன் செயலி சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

வீதி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையில் இரண்டு முன்னோடி போக்குவரத்து திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாரதிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் ஜனவரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. ஜனவரி 19 வரை முன்னெடுக்கப்படும் ஒரு முன்னோடித் திட்டமாகும் என்று இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இரண்டு அடிப்படை வழிகள் உள்ளன. முதலாவது உற்பத்திப் பொருளாதாரம். இரண்டாவது வரி பொருளாதாரம். இது தவிர, குடிமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் அபராதமும் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஓரளவு பங்களிக்கிறது.

மிகச் சமீபத்திய அரசியல் தலைவர்கள் இந்த நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தைப் பூஜ்ஜியமாகக் குறைத்து, அபராதம் மற்றும் வரிப் பணப் பொருளாதாரமாக மாற்றியுள்ளனர். எனவே, அபராதம் மற்றும் வரி விதிப்பு தொடர்ந்து மக்களை ஒடுக்கியது. இந்த அடக்குமுறை முறைகளைக் குறைத்து அரசுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்புப் பாலத்தை உருவாக்குவதும் விரும்பிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் பெப்ரவரி 17ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. பொருளாதாரப் பாதையின் சில முன்னறிவிப்புகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எது எப்படி இருந்தாலும் 2025இல் நாடு வேறு திசையில் நகரும். மக்களின் ஆணையின் அடிப்படையில் புதிய அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் திசை தீர்மானிக்கப்படும். சம்பள உயர்வு, ஈவுத்தொகை, கமிஷன் போன்றவற்றில் மட்டுமே வேலை செய்தவர்கள் இந்த வித்தியாசத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சமூக மாற்றத்தை அடைவதில் மனோபாவ மாற்றமும் முக்கியமானதாக இருக்கும். இனிமேல் அரசப் பணியில் ஊழல், மோசடி, முறைகேடுகள் பற்றிய செய்திகள் உருவாக்கப்படாது என்ற நம்பிக்கை உள்ளது. பொதுவான சமூக இலக்குகளில் பணிபுரியும் மக்களை உருவாக்க வேண்டிய அவசியம். இது நிகழ்காலத்தை விட எதிர்காலத்திற்கு முக்கியமானது.

எதிர்கால உலகை உருவாக்குவதே குறுகிய லாப நோக்கமின்றி நமது நிகழ்காலத்தில் இந்த சாதனைகளுக்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த மக்களுக்காக செய்யக்கூடிய மிக உயர்ந்த தியாகமாகும். அதற்கான அடிப்படைப் பின்னணியைத் தயாரிப்பது நம் அனைவரின் கூட்டுப் பணியாகும். குறிப்பிட்ட சமூக எடையுடன் கூடிய கூட்டுப் பொறுப்பை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# திருப்பி அனுப்பப்படும் ரோஹின்ய அகதி மக்கள்

**லக்ஸ்மன்**

பர்மா என்ற பண்டைய பெயரையுடைய மியன்மாரில் நடைபெற்று வரும் கடும்போக்கு வாதிகளின் அச்சுறுத்தலால், தங்களது வாழ்விடங்களை இழந்து, உயிரை மாத்திரமேனும் காத்துக்கொள்ளும் வகையில் ஆபத்தான கடல் மார்க்கப் பயணத்தின் மூலம் இலங்கை வரும் ரோஹிங்ய மக்கள் தொடர்ச்சியாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். 2024 டிசெம்பரில் வந்தவர்களும் திருப்பி அனுப்பப்படுவார்கள். என்ன வித்தியாசம் என்றால் கடந்த தடவைகளில் ஐ.நாவின் அகதிகளுக்கான அலுவலகம் இங்கிருந்தது. இப்போது அது இல்லை.

இலங்கையில் இனக் கலவரங்கள் ஏற்பட்ட காலங்களிலும், யுத்தம் நெருக்கடியான வேளைகளிலும் இந்தியா உள்ளிட்ட அயல் நாடுகளை நோக்கி இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். அங்கிருந்தும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். கடல் பயணமாக அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் இலங்கைத் தமிழர்கள் சென்றுள்ளனர். இப்போது அவ்வாறான பயணங்கள் ஓய்ந்து விட்டது. என்றாலும், அவுஸ்திரேலிய அரசாங்கம் சட்டவிரோத பயணங்கள் பற்றிய விளம்பரங்களை மேற்கொண்ட வண்ணமே இருக்கிறது.

இந்த நிலையில்தான், கடந்த வருட இறுதியில் கடல் வழியாக மியன்மாரிலிருந்து முல்லைத்தீவு வந்தடைந்த ரோஹிங்ய அகதிகளை உரிய சட்ட நடைமுறைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் அவர்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அமைச்சர் ஆனந்த விஜேபால கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். இந்தக் கருத்தானது பல சந்தேகங்களைத் தோற்றுவித்திருப்பதுடன், அரசாங்கத்தின் இந்தச் செயல்பாடு குறித்து விமர்சனங்களையும் உருவாக்கி வருகிறது.

மியன்மாரிலிருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர். கப்பலிலிருந்த 12 பணியாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதேநேரம், ஏனையவர்களை மிரிகானையிலுள்ள சட்ட விரோத குடியேற்றகாரர்களுக்கான தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்க உத்தரவிடப்பட்டு இருந்தபோதிலும், அழைத்துச் செல்லப்பட்டு இடைவழியில் திருப்பியனுப்பப்பட்டு பின்னர் முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள அகதிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கே அனுப்பிவைப்பதாகவே அமைந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தியால் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கம் மியன்மார் மக்கள் குறித்து சாதகமான முடிவை எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், மியன்மார் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு நாட்டை வந்தடைந்தவர்களது பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் அந்நாட்டு அரசாங்கத்திடம் வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு 1951ஆம் ஆண்டு அகதிகள் பிரகடனத்தில் கையெழுத்திடாத போதிலும், அகதிகள் அல்லது புகலிடக்கோரிக் கையாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்ளக் கூடிய அபாயம் உள்ள நாட்டுக்கு அவர்களை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பக்கூடாது எனும் சர்வதேச அடிப்படை சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியது அவசியமாகும். அதன்படி, மியன்மாரிலிருந்து நாட்டை வந்தடைந்த அகதிகளை இலங்கை அரசாங்கம் மீண்டும் அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது. இது ஒரு நாட்டிற்கு வருகை தந்த புகலிட கோரிக்கையாளர்களது உரிமையை மீறுவதாகவே உள்ளதென்று சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில், மனித உரிமைச் செயற்பாட்டாளரான ருக்கி பெர்ணான்டோ, தமது நாட்டில் வசிப்பதற்கு அச்சம் கொண்டு தப்பி வந்தவர்களை மீண்டும் அந்த நாட்டுக்கு அனுப்புவது சர்வதேச சட்டத்துக்கு முரண் என்பதுடன், அவர்களைக் குற்றவாளிகளாகவோ, சந்தேகநபர்களாகவோ பார்ப்பது தவறு என்பதுடன் தடுத்து வைப்பதும் தவறாகும் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த இடத்தில் தான் மியன்மார் அகதிகள் குறித்த இலங்கையின், கடந்த கால செயற்பாடுகள் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும். அதேநேரத்தில், மியன்மார் அகதிகளின் வருகை இது முதல் தடவையல்ல என்பதுடன், ஏற்கெனவே வந்தவர்கள் அவர்களது நாட்டுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 2008 மார்ச் 3ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மியான்மரை சேர்ந்த 55 பேர், ஐ.நா. அகதிகள் ஆணையத்திடம் கையளிக்கப்பட்டு 2012 ஜூலை மாதம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். அதேநேரம், 2013 பெப்ரவரியில் இலங்கை கடற்பரப்பில் கைதான 170 மியன்மார் பிரஜைகளும் அவ்வாறே ஐ.நாவிடம் ஒப்படைக்கப்பட்டு 2015 நவம்பரில் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டனர்.

அத்துடன், 2017 ஏப்ரல் 30ஆம் திகதி இலங்கை கடற்பரப்பிற்குள் வைத்து இரு இந்தியர்களுடன் கைதான பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட மியன்மாரைச் சேர்ந்த 30 பேர் மற்றும் இலங்கையில் பிரசவமான குழந்தைக்கும் ஏற்பட்ட நெருக்கடியான நிலை பல பிரச்சினைகளை நாட்டுக்குள் ஏற்படுத்தியிருந்தது. இந்த மியன்மார் அகதிகள் 5 வருடங்களாகத் தங்கியிருந்த இந்தியாவிலிருந்து தம்முடைய நாட்டுக்கு அனுப்பப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அங்கிருந்து இலங்கைக்கு வந்திருந்தனர்.

ஆனால், இங்கு வந்தவர்களுக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. மிரிஹான தடுப்பு முகாமிலிருந்த வேளை மியன்மார் பெண் ஒருவர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இது தொடர்பில் நுகேகொட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வாறு பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக ஐ.நாவின் அகதிகளுக்கான அலுவலகத்தினால் கல்கிசையில் வாடகை வீடொன்றில் தங்க வைக்கப்பட்டனர். அங்கு ஏற்பட்ட பௌத்த அமைப்புகள், பிக்குகள் உள்ளிட்டோரின் ஆர்ப்பாட்டம் போன்ற பிரச்சினைகள் காரணமாகப் பூசா தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டு பின்னர் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலை தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் தான், கடந்த வருடத்தின் இறுதியில் மியன்மாரிலிருந்து 115 பேர் இலங்கைக்கு வந்திருந்தனர்.

ஆனால், அந்த அகதிகளைத் தங்க வைப்பது தொடர்பில் இறுதி நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு, அரசாங்கத்தின் நடவடிக்கையில் மாற்றம் இருக்கிறது என்பதைக் காட்டி விட்டது. கடந்த காலங்களில் ஏற்பட்டது போன்றதான ஒரு ஆபத்தான நிலைமை மியன்மார் மக்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே மிரிஹானை மாற்றப்பட்டு முல்லைத்தீவிலுள்ள விமானப்படை முகாம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், அம்மக்களை மீண்டும் அவர்களுடைய நாட்டுக்கு அனுப்பப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பிழையானது என்ற கருத்துக்களே வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

கடந்த காலங்களில் மியன்மார் மக்களுக்கெதிராக நடைபெற்ற சம்பவங்களுக்கு எதிராக இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அம்மக்களின் நலன்களில் அக்கறை எடுத்திருக்கின்றனர். அதேபோன்று, தற்போது தங்களது அக்கறையையும், ஆதரவையும் வழங்கி வருகின்றனர். மியன்மார் அகதிகள் குறித்து வெளிவரும் தகவல்கள் காரணமாக அரசாங்கத்தின் மீது ஏற்பட்ட நம்பிக்கை அற்ற நிலை காரணமாகவும் இவ்வாறான நிலை உருவாகியிருக்கலாம். இருந்தாலும், கடந்த அரசாங்களைப் போலல்லாமல், தீர்மானம் எடுக்கப்படுதல் முக்கியமானதே. அது சாத்தியமானதா என்பதுதான் கேள்வி.

சந்தேகம் என்னவென்றால், முல்லைத்தீவில் தங்க வைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளைச் சந்திக்கச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் சந்திப்புக்கு அனுமதி வழங்காமைக்கு மியன்மார் மக்களிடமிருந்து நோய்த் தொற்றுக்கள் பரவலாம் என்ற அச்சம் காணப்படுவதாகக் கூறியிருக்கிறார். அவர்கள் அனுமதிக்கப்படாமை பற்றி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அமைச்சர் அம்மக்கள் தொடர்பான விபரங்கள் மியன்மாரின் அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசு இந்த அகதிகள் விடயத்தில் சரியான அல்லது அம்மக்களுக்கு சாதகமான வழிமுறைகளைப் பின்பற்றுமா என்பது விளக்கம் சொல்ல முடியாதது ஒன்றே.

எது எவ்வாறாயினும், மியன்மாரிலிருந்து நாட்டுக்கு வந்த மக்கள் இங்கு நிரந்தரமாகத் தங்க வைக்கப்பட்ட போவதில்லை என்பது மாத்திரம் உறுதியானது. ஆனால், அவர்கள் அவர்களுடைய நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கான உத்தரவாதத்தினை மாத்திரம் இலங்கை அரசினால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது சந்தேகம் தான். நாடு இருந்து கொண்டிருக்கும் நெருக்கடியான நிலையில், அடிப்படையான தீர்மானங்களின் அடிப்படையிலேயே எந்த ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என்பதுவே நிச்சயமானது.

எவ்வாறானாலும், ரோஹின்ய மக்கள் நாடு நாடாகச் சிதறி ஓடுவதும் அல்லல் படுவதும் மனித உரிமைகளை மீறும் செயல் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும் அவர்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழி சமைப்பது யார் என்பதுதான் கேள்வி.



## வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள் எனச் சென்று விடியவிடியக் கண்விழித்துப் பார்த்தல் என ஏராளமான நினைவுகள், நினைவு அடுக்குகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் காலத்தல், பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்த பசுமை மிகு எண்ணங்களில் இருந்து மீள முடியாதுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிசிக்கும். கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள். கோவில் திருவிழாக்கல்,

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வந்த வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி ஓய்ந்திருக்கின்ற நிலையில், கிராமியக் குளங்கள் முற்றாக நிரம்பியுள்ளன. இந்நிலையில் அக் குளங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பெருநிலப்பரப்பிற்குட்பட்ட போரதீவுபற்று பிரதேசத்திற்குட்பட்ட வெல்லாவெளி குளத்தில் முதலைகள் அதிகளவு நடமாடுவதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த குளத்தில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அக்குளத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளும் மீன் பிடியில் ஈடுபடுபவர்களும், மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் போரதீவுப் பற்று பிரதேச செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள வெல்லாவெளி குளத்தில் மாத்திரம் சுமார் 07 இற்கு மேற்பட்ட முதலைகள் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்..

அத்துடன், அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மட்டக்களப்பு வாவியிலிருந்து இவ்வாறு குளத்துக்கு முதலைகள் வந்திருக்கலாம் என தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், குறித்த குளமானது மக்கள் குடியிருப்பு அண்மித்துள்ளதால் பொதுமக்களும், அப்பகுதியில் இரவு வேளைகளில் பயணம் செய்யும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– வ.சக்திவேல்



### TAGS விருதுகள்

# 2024இல் தங்க விருதை சுவீகரித்தது SLT-MOBITEL




TAGS விருதுகள் 2024இல் தொலை தொடர்பாடல்கள் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் பெருமைக்குரிய தங்க விருதை SLT-MOBITEL சுவீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்நிகழ்வு அண்மையில், கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வை இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவகம் (CA Sri Lanka) ஏற்பாடு செய்திருந்தது. நிதியியல் மற்றும் நிதிசாரா அறிக்கையிடல் போன்றவற்றில் சிறப்புக்கான கௌரவிப்பை SLT-MOBITEL பெற்றுக் கொண்டது.

TAGS விருதுகளினூடாக, நிறுவனங்களினுள் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை போன்றன ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த ஆண்டின் விருதுகளின் தொனிப்பொருள் 'The Digital Edge - Enriching Corporate Reporting Excellence' என்பதாக அமைந்திருந்தது. கூட்டாண்மை அறிக்கையிடலில் AI மற்றும் டிஜிட்டல் புத்தாக்கம் ஆகியவற்றின் மாற்றியமைப்பு பங்களிப்பை கொண்டாடும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்தது.

கூட்டாண்மை ஆளுகையில் உயர் நியமங்களை பேணுவது மற்றும் தொலைத்தொடர்பாடல் துறையில் புத்தாக்கத்துக்கான அர்ப்பணிப்பு போன்றவற்றில் உயர் நியமங்களுக்கான அர்ப்பணிப்பை SLT-MOBITEL இன் சாதனை வெளிப்படுத்தியுள்ளது. நிறுவனத்தின் வருடாந்த நிதி அறிக்கையினூடாக இலங்கையின் மேம்படுத்தப்பட்ட இணைப்புத்திறன் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பில் தனது செயற்பாடுகளை பொருந்தச் செய்வதில் எய்தியுள்ள சாதனைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

தொழிற்துறையினுள் இந்த கௌரவிப்பை பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில்,விருதுகள் வழங்கும் நிகழ்வில் பல்வேறு துறைகளின் புகழ்பெற்ற நபர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, SLT-MOBITEL பிரதம நிதி அதிகாரி சஞ்ஜீவ சமரநாயக்க, பெருமைக்குரிய விருதை பெற்றுக் கொள்வதையும், அருகில், SLT இன் வருமான திரட்டல் பொது முகாமையாளர் அசங்க விமலரட்ன, காணப்படுகின்றார். அவர்களுடன், SLT-MOBITEL குழும கம்பனி செயலாளர் மஹேஷ் அதுகோரல, SLT சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி, SLT நிதிக் கணக்கீடு மற்றும் வரிகள் பொது முகாமையாளர் நிஷாந்த கருணாரட்ன, SLT இன் நிதி கணக்கீடு மற்றும் வரியிடல் பிரதி பொது முகாமையாளர் ஜயலத் பீரிஸ், மற்றும் SLT செயற்படுத்தல் மற்றும் பிரிவு விருத்தி பிரதி பொது முகாமையாளர் ஆன் பெர்னான்டோ ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கொமர்ஷல் வங்கி அணியுடன் மதீஷ பத்திரண







இலங்கையின் இளம் கிரிக்கெட் நட்சத்திர வீரர்களுள் ஒருவராக திகழும் மதீஷ பத்திரண, கொமர்ஷல் வங்கியின் வர்த்தக நாம தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிணங்க மதீஷ குறிப்பாக கொமர்ஷல் வங்கியின் டெபிட் அட்டை வர்த்தகநாமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார், நாட்டின் மிகப்பெரிய டெபிட் அட்டை தளமான கொமர்ஷல் வங்கி டெபிட் அட்டை வர்த்தக நாமமானது இந்த இளம் கிரிக்கெட் நட்சத்திர வீரரின் பிரபலமான குணங்களான வேகம் மற்றும் சுறுசுறுப்பினை பிரதிபலிப்பது இங்கு குறிப்பிட்டு கூற வேண்டிய சிறப்பம்சமாகும். 22 வயதில், வலது கை வேகப்பந்து வீச்சாளரான இவரின் பெயர் ஏற்கெனவே இலங்கையிலும் இந்தியாவிலும் பிரபலம் பெற்று திகழ்கிறது. இந்த இளம் கிரிக்கெட் வீரரின் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் மீளெழுச்சி போன்ற குணங்களை இலங்கையின் அதிக விருதுகளைப் பெற்றுள்ள நிதியியல் நிறுவனமான கொமர்ஷல் வங்கி கொண்டுள்ளதாக கொமர்ஷல் வங்கி பெருமிதத்துடன் கூறுகிறது.

'கொமர்ஷல் வங்கியின் வர்த்தக நாம தூதுவராக மதீஷ பத்திரணவை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க தெரிவித்தார். 'அவர் சர்வதேச அளவில் புகழ்பெற்ற வேகப்பந்து வீச்சாளரும் மற்றும் ஆட்டத்தை மாற்றியமைப்பவராகவும் திகழ்கின்றார். நாம் ஒன்றிணைந்து, இலங்கைக்குள் மட்டுமன்றி உலக அரங்கிலும் சிறந்து விளங்குவதற்கான நம்பிக்கையையும் அர்ப்பணிப்பையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்'

கண்டியில் பிறந்து திரித்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற மதீஷ, நியூசிலாந்துக்கு எதிராக தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொடருக்கு முன்னதாக, 12 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 29.8 திறன் விகிதத்தில் 17 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். T20 சர்வதேச போட்டிகளில் அவரது சாதனை இன்னும் சிறப்பாக திகழ்கிறது. 17 போட்டிகளில் 28 விக்கெட்டுகளை 10.5 என்ற அற்புதமான திறன் விகிதத்தில் கைப்பற்றியுள்ளார். இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐபிஎல்) பிரபலமான பெரும் கிரிக்கெட் நட்சத்திர வீரரான எம். எஸ். தோனி தனது வழிகாட்டியாக இருந்தபோது, சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக மதீஷ 13.2 திறன் விகிதத்தில் 34 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

கொமர்ஷல் வங்கியானது Visa, Mastercard, UnionPay மற்றும் LankaPay (JCB) வர்த்தக நாமங்களில் டெபிட் அட்டைகளை வழங்கி வருகிறது. அனைத்து கொமர்ஷல் வங்கி அட்டைகளும் இயல்பாகவே சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்று திகழ்கின்றன. மேலும் அட்டையுடனான மற்றும் அட்டை - இல்லாத பரிவர்த்தனைகள், ந-வர்த்தகம் மற்றும் இணையத்தள கொள்வனவுகள் ஆகிய இரண்டிற்கும் ஏற்புடையனவாக திகழ்கின்றன. உலகெங்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே போல் இலங்கையில் உள்ள 7,000 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில், கொமர்ஷல் வங்கி ஷொப்பிங் டெபிட் அட்டை என்பது பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதற்கான எளிதான மற்றும் மிகவும் வசதியான வழியாகக் கருதப்படுகிறது.

கொமர்ஷல் வங்கியின் டெபிட் அட்டைகள் சாதாரண சேமிப்புக்கணக்குகளில் இருந்து விசேட பண வைப்புக் கணக்குகள் வரை இளைஞர், மகளிர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் போன்ற பரந்த வேறுபட்ட பிரிவுகளில் பல்வேறு சேமிப்புக்கணக்குகள் மற்றும் நடைமுறை கணக்குகளுக்கு வழங்கப்படுகின்றன.

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு...









மஸ்கெலியாவில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் "மாணிக்கம் அறக்கட்டளை" ஊடாக மாதாந்தம் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு மஸ்கெலியா ஸ்ரீ மகள் திருமண மண்டபத்தில் சனிக்கிழமை (04) இடம்பெற்றது.

'மாணிக்கம் அறக்கட்டளை' நிறுவனர் எம்.சதாசிவம் தலைமையில் நடைபெறும் குறித்த நிகழ்வில் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் பிரதம அதிதியாகவும், அவரோடு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மூவினங்களையும் சேர்ந்த 20 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

## குருதி கொடை





கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின், இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்த தட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு அட்டாளைச்சேனை சேனையூர் இளைஞர்கள் மற்றும் பாலமுனை பிறைட் இளைஞர்கள் அமைப்புகள் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'உதிரம் கொடுப்போம் உயிர்களைக் காப்போம்' எனும் தொனிப் பொருளிலான இரத்ததான நிகழ்வு அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் சனிக்கிழமை(04) இடம்பெற்றது.

– எம்.ஏ.றமீஸ்

## உலருணவுப்பொதிகள்




பொத்துவில் – வட்டிவெளிக் கிராமத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 27 குடும்பங்களுக்கு ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (04) நடைபெற்றது. றோட்டறி கழகத்தின் தலைவர் றொட்டேரியன் என். ரதீசன் தலைமையில் நடைபெற்றதுடன், றொட்டேரியன்கள் செயலாளர் எம். சிவபாதசுந்தரம், முன்னாள் உப தவிசாளர் பெ.பார்த்திபன், கே.ரவிச்சந்திரன், இ.சுந்தர்ராஜன் ஆகியோர் பங்குபற்றினர். இதற்கான நிதியினை யாழ். கனகரட்ணம் குடும்பத்தினர் அன்பாலயம், அவுஸ்திரேலியாவின் ஊடாக வழங்கியுள்ளனர்.

– வி.ரி.சகாதேவராஜா










## சபாநாயகர் கண்டிக்கு விஜயம்



சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன வரலாற்று பிரசித்தி பெற்ற கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்திற்கு சனிக்கிழமை (04) விஜயம் செய்தார். பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். அங்கு ஆலய அறங்காவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாக சபையினர் சபாநாயகரையும் குழுவினரையும் வரவேற்றனர். விசேட பூஜையும் வழிபாடும் இடம் பெற்றது. முன்னதாக சபாநாயகர் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்கர்களையும் சந்தித்து ஆசி பெற்று கலந்துரையாடினார்.

– வி.ரி.சகாதேவராஜா





## ஊதா நிற கொய்யா இனம்

பொகவந்தலாவ – ஆரியபுர பிரதேசத்தில் வசிக்கும் கெலும் பிரதீப் என்பவரின் வீட்டில், ஊதா நிற கொய்யா வகை பழம் தருகிறது.

கொய்யா மரத்தில் ஊதா நிறம், பூக்கள் மற்றும் பழங்கள் இருப்பதாகவும், வட்டவளை கிராமத்தில் வசிக்கும் தனது சகோதரியின் வீட்டில் இருந்து இந்த கொய்யா மரத்தை கொண்டு வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் முன்னர் நடவு செய்ததாகவும் கூறினார்.

இந்தக் கொய்யா மரத்தைப் பார்ப்பதற்காக அக்கம்பக்கத்தினர் தினமும் தனது வீட்டிற்கு வருவார்கள் என கெலும் பிரதீப் கூறினார்.

– ரஞ்சித் ராஜபக்ஷ



ஈகுவடார்

ஈகுவடாரில் இராணுவ

# அவசர நிலை பிரகடனம்



தென் அமெரிக்க நாடான ஈக்வடாரின் 7 மாகாணங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் இராணுவ அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டு மோதல்கள் மற்றும் ஆயுதம் ஏந்திய கும்பல்களின் தாக்குதல்களுக்கு எதிராக அந்நாட்டு இராணுவமும் பொலிஸாரும் அப்பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள நிலையில், சனிக்கிழமை(4) முதல் அடுத்த 60 நாள்களுக்கு 7 மாகாணங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் இராணுவ அவசரநிலை பிரகடனம் செய்யப்படுவதாக ஈக்வடார் ஜனாதிபதி டேனியல் நொபோவா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், அந்நாட்டில் பெருகி வரும் குற்றங்களும் ஆயுதம் ஏந்திய கும்பல்களின் தாக்குதல்களும்தான் இந்த அவசர நிலைக்கு முக்கிய காரணம் என்றும் சட்டம் ஒழுங்கை சீராக்க இராணுவமும் காவல் துறையும் பயங்கர நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இந்த அவசர நிலையின் அடிப்படையில், 7 மாகாணங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள வீடுகளில் எப்போது வேண்டுமானாலும் சோதனை மேற்கொள்ள அங்குள்ள மக்களின் தனியுரிமை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 20 மண்டலங்களில் இரவு நேர ஊரடங்கும் அமுலபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஜனவரி முதல் ஈக்வாடார் நாட்டில் ஆயுதம் ஏந்திய கும்பல்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. பொதுமக்களின் மீது தாக்குதல் நடத்திய ஆயுதம் ஏந்திய 22 கும்பல்களை அந்நாட்டு அரசு தீவிரவாதிகள் என அறிவித்திருந்த நிலையில் தற்போது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

பஸ் மீது கண்ணிவெடி தாக்குதல்:

# அறுவர் பலி; 25 பேர் படுகாயம்



பாகிஸ்தானில் சனிக்கிழமை (4) அன்று இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 6 பேர் உயிரிழந்ததுடன், 25 பேர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தன்று பாகிஸ்தான்-பலூசிஸ்தான் மாகாணம், டர்பெட் நகரில், திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக மூத்த பொலிஸ் அதிகாரி மற்றும் அவரது குடும்பத்தினர் அடங்கிய சுமார் 36 பேர் பயணித்துள்ளனர்.

பஸ் நியூ பஹ்மென் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, பஸ்ஸை குறிவைத்துக் கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் பஸ்சில் பயணித்த 6 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 25 பேர் படுகாயமடைந்துள்ளனர்.


தகவலறிந்து விரைந்து சென்ற பொலிஸார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர்.

மேலும், இந்த கண்ணிவெடி தாக்குதலை பலூசிஸ்தான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் நடத்தினரா? என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொலம்பியா

சுற்றுலா பஸ் விபத்து:

# 12 பேர் பலி; 30 பேர் படுகாயம்



கொலம்பியா நாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள நெடுஞ்சாலையில், சனிக்கிழமை(4), சுற்றுலா பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில், 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பஸ்ஸில், 42 பயணிகள் பயணித்தனர். அந்தப் பஸ், வளைவில் திரும்பியபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், பஸ்ஸில் பயணம் செய்த 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து அங்கு வந்த மீட்புக்குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்தியப் பிரதேசம்

வீட்டு கழிவுநீர் தொட்டியில் இருந்து,

# 4 சடலங்கள் மீட்பு

மத்தியப் பிரதேசத்தின் சிங்ராலி மாவட்டத்தில் உள்ள வீடொன்றின் கழிவுநீர் தொட்டியிலிருந்து 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வீடு, மாவட்ட தலைநகரிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பார்கவான் காவல் நிலைய எல்லைக்குள் உள்ளது.

கழிவுநீர் தொட்டியிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக உள்ளூர்வாசி ஒருவர் பொலிஸாருக்கு தகவல் அளித்தனின் பேரில், சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், தொட்டியிலிருந்த 4 சடலங்களை மீட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் வீட்டு உரிமையாளர் ஹரி பிரசாத் பிரஜாபதியின் மகன் சுரேஷ் பிரஜாபதி (30), மற்றொருவர் கரன் ஹல்வாய் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய இரண்டு சடலங்களும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

முதற்கட்ட விசாரணையின்படி, சுரேஷ் மற்றும் கரண் ஆகியோர் தங்கள் நண்பர்களுடன் ஒரு விருந்துக்கு ஜனவரி 1ஆம் திகதி வீட்டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் வளாகத்தில் கொல்லப்பட்டு அவர்களது சடலங்கள் கழிவுநீர் தொட்டியில் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக, பொலிஸார் கூறியுள்ளனர்.

கேரளா/ தெலுங்கானா

புதிய வைரஸ் குறித்து கேரளா, தெலுங்கானா அரசுகள்

# தீவிர கண்காணிப்பு




சீனாவில் பரவும் எச்.எம்.பி.வி. தொற்று குறித்து, கேரளா மற்றும் தெலுங்கானா மாநில அரசுகள் தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்துள்ளன.

சீனாவில் எச்.எம்.பி.வி. என்னும் வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருவதாகவும் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த வைரஸ் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்று சீன நாட்டுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவுக்கு பின்னர் மீண்டும் ஒரு தொற்று பரவலா? என்று உலக நாடுகள் இந்த விவகாரத்தை கண்காணிக்க ஆரம்பித்துள்ளன.

இந்தியாவிலேயே கேரள மாநில மக்கள்தான் அதிக அளவில் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். இந்நிலையில், சீனாவில் பரவும் எச்.எம்.பி.வி. தொற்று குறித்து அந்த மாநில அரசு தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்துள்ளன.

இது தொடர்பாக அந்த மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறியுள்ளதாவது,

“சீனாவில் கண்டறியப்பட்ட வைரஸ் தொற்றுநோயாக மாறக்கூடிய அல்லது மற்ற பகுதிகளுக்கு வேகமாகப் பரவக்கூடியதாக இதுவரை எந்த தகவலும் இல்லை. உலகின் அனைத்து பகுதிகளிலும் மலையாளிகள் இருப்பதால், சீனா உள்பட வெளிநாட்டவர்கள் அடிக்கடி மாநிலத்திற்கு வருவதால், கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாங்கள் சீனாவில் நிலைமையைக் கண்காணித்து வருகிறோம். இருப்பினும் மக்கள், குறிப்பாகக் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும். பொது இடங்களில் முகக் கவசம் அணிய வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளது.

தெலுங்கானாவின் பொதுச் சுகாதார இயக்குநர் பி.ஆர். அவிந்தர் நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மாநிலத்தில் இதுவரை எச்.எம்.பி.சி. பாதிப்பு பற்றி எதுவும் பதிவாகவில்லை. இருப்பினும் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். சர்வதேச சுகாதார அமைப்புகளுடன் தொடர்பில் இருக்கிறோம்” என்று கூறியுள்ளார்.




முதலாவது போட்டியில்

# இலங்கையை வீழ்த்தியது நியூசிலாந்து

இலங்கைக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், வெலிங்டனில் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார். இலங்கை சார்பாக வேகப்பந்துவீச்சாளர் எஷான் மலிங்க அறிமுகத்தை மேற்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலேயே மற் ஹென்றியிடம் பதும் நிஸங்கவையும், ஜேக்கப் டஃபியிடம் குசல் மென்டிஸையும் இழந்ததோடு, கமிந்து மென்டிஸ் ரண் அவுட்டாக தடுமாறியது.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் சரித் அசலங்கவும் நாதன் ஸ்மித்திடம் வீழ்ந்தபோதும் அவிஷ்க பெர்ணாண்டோ, ஜனித் லியனகேயின் இணைப்பாட்டத்தில் இனிங்ஸை இலங்கை நகர்த்தியபோதும் 36 (54) ஓட்டங்களுடன் லியனகே சான்ட்னெரிடமும், 56 (63) பெர்ணாண்டோ ஸ்மித்திடமும் அடுத்தடுத்த ஓவர்களில் வீழ்ந்தனர்.

பின்னர் சமிது விக்ரமசிங்கவும், வனிது ஹசரங்கவும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், ஹென்றியிடம் 22 (42) ஓட்டங்களோடு விக்ரமசிங்க வீழ்ந்ததோடு, அடுத்த ஹென்றியின் ஓவரில் 35 (33) ஓட்டங்களோடு ஹசரங்கவும் வீழ்ந்தார். இதற்கடுத்த ஹென்றியின் ஓவரில் மலிங்க வீழ்ந்ததோடு, அசித பெர்ணாண்டோ இரண்டு ஓவர்களில் டஃபியிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து, 43.4 ஓவர்களில் 178 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.

பதிலுக்கு 179 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, றஷின் றவீந்திர, வில் யங்க் மூலம் வேகமாக ஓட்டங்களைச் சேகரித்த நிலையில் 45 (36) ஓட்டங்களுடன் விக்ரமசிங்கவிடம் றவீந்திர வீழ்ந்தார். பின்னர் வந்த மார்க் சப்மனின் ஆட்டமிழக்காத 29 (36) ஓட்டங்களின் துணையுடனும் வில் யங்கின் ஆட்டமிழக்காத 90 (86) ஓட்டங்களோடு 26.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் நியூசிலாந்து வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹென்றி தெரிவானார்.

இந்தியாவுக்கெதிரான தொடரை

# கைப்பற்றியது அவுஸ்திரேலியா




இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்றிருந்த நிலையில் மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நான்காவது போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா, சிட்னியில் வெள்ளிக்கிழமை(03) ஆரம்பித்து நேற்று (05) முடிவுக்கு வந்த ஐந்தாவது டெஸ்டில் வென்றதன் மூலம் 3-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றி சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

இந்தியா: 185/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 40, இரவீந்திர ஜடேஜா 26, ஜஸ்பிரிட் பும்ரா 22 ஓட்டங்கள்.

பந்துவீச்சு: ஸ்கொட் போலண்ட் 4/31, மிற்செல் ஸ்டார்க் 3/49, பற் கமின்ஸ் 2/37, நேதன் லையன் 1/19)

அவுஸ்திரேலியா: 181/10 (துடுப்பாட்டம்: பியூ வெப்ஸ்டர் 57, ஸ்டீவன் ஸ்மித் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 3/42, மொஹமட் சிராஜ் 3/51, நிதிஷ் குமார் ரெட்டி 2/32, ஜஸ்பிரிட் பும்ர 2/33)

இந்தியா: 157/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 61 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்கொட் போலண்ட் 6/45, பற் கமின்ஸ் 3/44, பியூ வெப்ஸ்டர் 1/24)

அவுஸ்திரேலியா: 162/4 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 41, பியூ வெப்ஸ்டர் ஆ.இ 39, ட்ரெவிஸ் ஹெட் ஆ.இ 34 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 3/65, மொஹமட் சிராஜ் 1/69)

போட்டியின் நாயகன்: ஸ்கொட் போலண்ட்

தொடரின் நாயகன்: ஜஸ்பிரிட் பும்ரா

சிம்பாப்வேவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்

# ஆப்கானிஸ்தான் முன்னிலை



சிம்பாப்வேவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் ஆப்கானிஸ்தான் முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், புலவாயோவில் வியாழக்கிழமை (02) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் நியூமன் நையம்ஹுரி(3), சிகண்டர் ராசா (3), றிச்சர் நகரவா, பிளஸிங்க் முஸர்பனியிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 157 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, அணித்தலைவர் கிறேய்க் எர்வினின் 75, ராசாவின் 61, ஷோன் வில்லியம்ஸின் 49 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ரஷீட் கான் 4, யமின் அஹ்மட்ஸாய் 3, பரீட் அஹ்மட் 2, ஸியா-உர்-ரஹ்மான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் ஆப்கானிஸ்தான் ரஹ்மத் ஷாவின் 139, இஸ்மத் அலாமின் ஆட்டமிழக்காத 64 ஓட்டங்களோடு மூன்றாம் நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பந்துவீச்சில், முஸர்பனி 4, நகரவா 2, ராசா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்ழமை, 06 ஜனவரி 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.